**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்.**
**ந.க.எண். 0058/அ2/2026, நாள். .01.2026.**

---

**பொருள் :** பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அகத்தணிக்கை கூட்டமர்வு – Joint Sitiing கடந்த கால தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்தல் – தொடர்பாக.

**பார்வை :** சென்னை -6, பள்ளிக் கல்வி இயக்கக நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.001264 / அகத -2/ 2026, நாள். .01.2026.

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு நகரவை/ அரசு நிதியுதவி பெறும் உயர் மேல்நிலைப் பள்ளிகள் மாவட்டக் கல்வி அலுவலகங்கள் சார்ந்த அலுவலகங்களில் கையாளப்படும் வரவு செலவு கணக்குகள் மற்றும் பணியமைப்பு சார்பான விவரங்கள் (**Accounts and Service Matters**) மீது துறை அகத் தணிக்கை கூட்டமர்வு நடத்தி தடை நிவர்த்தி (**On the Spot Ratification**) மேற்கொள்வதோடு நேரடியாக பெறப்படும் தணிக்கை தடை கருத்துருக்களை நிவர்த்தி செய்து ஆணை வழங்கப்படவுள்ளது என பார்வையில் காணும் செயல்முறைகளின்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீண்ட கால தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்யும் வகையில் **19.01.2026** மற்றும் **20.012026** அன்று கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலகம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (**SSA Office**) காட்பாடி அலுவலகத்தில் தணிக்கை கூட்டமர்வு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் முந்தைய காலங்களில் துறை தணிக்கை மூலம் எழுப்பப்பட்ட தடைகளை நிவர்த்தி செய்யும் வகையில் தொடர்புடைய ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறும், தணிக்கை தடை நிவர்த்தி கூட்டமர்வு நடைபெறும் நாட்களில் தவறாது கலந்து கொண்டு தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. மேலும் " இ - சலான் தொகை செலுத்தியது சார்பாக பணம் செலுத்தியுள்ள பள்ளியின் / தனியரின் பெயர் அடங்கிய முழுமையாக செலுத்து சீட்டு (Challan)-ல் "பேமெண்ட் சக்சஸ்" (Payment Success) ஆக உள்ளதா என சரிப்பார்த்து உரிய கணக்கீட்டுத் தாளுடன் ஒப்பிட்டு சரியான தொகை செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து" அதன் பிறகு தொகுக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.
2. தடை நிவர்த்தி செய்ய கோரும் தணிக்கை தடை சார்பாக **தணிக்கை அறிக்கையின் முகப்பு கடிதம், தணிக்கை எழுப்பப்பட்ட பக்க நகல் மற்றும் வரிசை எண். 35, 36 மற்றும் 37 (Covering letter of the Audit Report, Audit Objection page and Serial No.35,36 and 37)** கட்டாயம் இத்துடன் வழங்கப்பட்டுள்ள படிவத்துடன் மேற்காண் விவரங்கள் இணைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
3. மேலும், உரிய ஆவணங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட தணிக்கை தடை நிவர்த்தி அறிக்கையுடன் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் கையொப்பத்துடன் பள்ளியில் பணிபுரியும் தலைமை ஆசிரியர் மற்றும் உதவியாளர்/ இளநிலை உதவியாளர் மட்டுமே வருகை புரிய வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு :**

படிவங்கள்

**// ஒப்பம் //**

**முதன்மைக் கல்வி அலுவலர்**
**வேலூர்.**

**பெறுநர்**

அனைத்து வகை தலைமையாசிரியர்கள்
அரசு / நகரவை /உயர்/ மேல்நிலைப் பள்ளிகள்.

**நகல்**

1. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) தொடர் நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது.
2. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் , ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, காட்பாடி , உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு தணிக்கை நடைபெறும் நாட்களில் இரண்டு கணினிகள் மற்றும் போதுமான மேசை நாற்காலிகள் தயார் நிலையில் வைத்திருக்கவும் கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது..
3. கோப்பிற்கு.

(பா.க)